நாள் 22.11.2023.

அசல் வழக்கு எண் 3/2008

பி சா 1 சுல்தான் அசன் ஷெரிப், த/பெ முகம்மது இப்ராஹிம்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி அவரது அனுபவ உரிமையை எனக்கு கிரையம் தந்ததாக பத்தி 2ல் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் , அந்த விவரம் தவறானது நான் நேற்றும் எனது வழக்கறிஞரிடம் அது பற்றி விவாதித்தேன். 1ம் பிரதிவாதி மற்றொரு நபருக்கு அனுபவ உரிமை கொடுத்து அந்த நபர் இன்னொரு நபருக்கு அனுபவ உரிமையை கொடுத்து , அந்த நபரான நபிசாபேகத்திடம் இருந்துதான் நான் அனுபவ உரிமை பெற்றுள்ளேன். நபிசா யாரிடம் இருந்து அனுபவ உரிமை பெற்றுள்ளார் என்றால், ஹனிப் என்பவரிடம் இருந்து வாங்கியிருக்கிறார். ஹனிப் யாரிடம் இருந்து வாங்கியிருக்றிர் என்றால், 1ம் பிரதிவாதியான முகம்மது உசேனிடம் இருந்து வாங்கியிருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு விவரம் யார் சொன்னார் என்றால், நான்தான் சொன்னேன். ஆனால் சில விவரங்கள் விடுபட்டிருக்கலாம். முகம்மது உசேனுக்கு 4 1/2 சென்ட் இடம்தான் ஆவணம் படி பாத்தியம் என்றால், ஞாபகம் இல்லை. வழக்கை நான் அவருடன் சேர்ந்து நடத்தி வருவதால் அவரிடம் நான் எவ்வளவு சென்ட் அவருக்கு பாத்தியம் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை அவருடம் சேர்ந்து வழக்கை நடத்தவில்லை. நான் 1ம் பிரதிவாதிக்காகவும் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள காலியிடம் யாருடைய இடம் என்று சொன்னால் என்னுடைய இடம் ஆகும். நான் கட்டிடம் கட்டுவதற்கு வரைபட அனுமதி பெற்றிருக்கிறேன் என்றால் சரிதான். கட்டிடத்தின் கிழமேல் எவ்வளவு அடிக்கு அனுமதி பெற்றுள்ளேன் என்றால், 24 அடி மொத்த அளவு ஆகும். கட்டிடம் உள்ள பகுதி எவ்வளவு என்றால், உத்தேசமாக 15 அடி இருக்கலாம். அதன் தென்வடல் நீளம் என்ன என்றால், 60 அடி ஆகும். தபசில் சொ்தையும் 1ம் பிரதிவாதியின் இடத்தையும் காண்பிக்கும் புகைப்படம்தான் என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் என்றுசொன்னால் சரிதான் அது <u>**வா சா ஆ 18**</u> ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கில் ஆரம்ப காலத்தில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு ஆணையர் இடத்தை பார்வையிட்டு தாக்கல் செய்துள்ள அறிக்கையில் 17 அடி நீளம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால், அது ஆக்கிரமிப்பு கிடையாது என்னுடைய அனுபவத்தில் இருக்கும் மடத்துக்கு சொந்தமான இடம் ஆகும். நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் பில்லர்போட்டு காண்பிக்கப்பட்டுள்ள பகுதி 17 அடி என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியைதாய் ஆணையர் வரைபடத்தில் ஏ பி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் கிழமேல் அளவு 41 3/4 அடி என்றால் எனக்கு தெரியாது அளக்கும்போது நான் இல்லை. தென்வடல் அளவு 59 அடி என்றால் சரிதான். தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் மல்கம்மாள் இடம் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியவில்லை. தபசில் சொத்தின் தெற்கு பக்கம் ஒரு முடுக்கு போன்ற அமைப்பு

இருக்கிறது என்றால் சரிதான். பில்லர்போன்ற அமைப்பு உள்ள இடத்தில் நான் கட்டியுள்ள வீட்டை இடித்து தர வேண்டிதான் வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது என்னுடைய இடம் ஆகும். காலியிடத்தின் கிழமேல் அளவு எவ் வளவு என்றால் 7 அடி ஆகும். நான் வாதியின் இடத்தை ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டியுள்ளதால் அதனை அகற்றி தர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அது தவறு.